## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 05.09.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா பக்கராவின் 184 முதல் 187 வரை ஓதினார்கள் :**

பொருள்: நம்பிக்கைக் கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று, உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர் ஆகலாம்.

(எனவே), கணிக்கப்பட்ட நாள்களில் (நோன்பு நோற்றுக் கொள்க.) உங்களுள் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விடுபட்ட நோன்பை) மற்ற நாள்களில் நோற்க வேண்டும். இதற்குரிய ஆற்றலைப் பெறாதவர்கள் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிப்பது கடமை ஆகும். ஒருவர் முழுமையாகக் கட்டுப்பட்டு ஒரு நற்செயல் செய்வார் எனில், அது அவருக்கு நன்றே. நீங்கள் அறிவுடையவர் என்றால், நோன்பு நோற்பது உங்களுக்குச் சிறந்தது.

ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப் பெற்ற மாதமாகும். குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக்கூடியதும், நேர்வழியைத் தெளிவாக்கக்கூடியவதும் (நன்மை தீமையை) பிரித்தறியக் கூடியதும் ஆகும். எனவே, உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால், நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விட்டுப்போன நோன்பை) மற்ற நாள்களில் கணக்கிட்டு (நோற்கவும்). அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகின்றான். உங்களுக்குக் கடினத்தை(த்தர) விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனைப் பெருமைப்படுத்துவதற்காகவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்தக் கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்.)

(தூதரே!) என்னடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கின்றேன்; பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்றபோது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கைக் கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக). (2:184-187)

நாம் இப்போது ரமலான் மாதத்தில் நுழைந்துள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் ஓதிய வசனத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்னவென்றால், நோன்பு என்பது எந்த இலக்கும் இல்லாமல் கடமையாக்கப்படவில்லை. தனது அடியார்களுக்கு தக்வாவில் வளர்ச்சி, ஆன்மீக முன்னேற்றம் கிடைப்பதற்காகவும், அவர்களுக்கு துஆ ஏற்றுக் கொள்ளப்படும் தத்துவத்தைப் புரிய வைப்பதற்காகவும், தர்பிய்யத்திற்கான பயிற்சியாகவும் அல்லாஹ் இந்த நோன்பை ஏற்படுத்தியுள்ளான்.

நான் ஓதிய முதல் வசனத்தில், நீங்கள் தக்வாவை கடைபிடிப்பதற்காக நோன்பு கடமையாக்கப் பட்டுள்ளது. எனவே, நீங்கள் எல்லா விதமான தீமைகளிலிருந்து தப்புவதற்காக அல்லாஹ்வுடைய அடைக்கலத்தின் கீழ் வந்து விடுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

**நபிமொழியில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“நோன்பு ஒரு கேடயமாகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக நோன்பை நீங்கள் ஒரு கேடயமாக ஆக்கிக் கொள்வீர்கள் எனில், இறைவனே உங்கள் கேடயமாகி விடுவான். பெரும்பெரும் பாவங்களில் இருந்து மட்டும் உங்களை விலக்குவதில்லை. மாறாக, சிறு சிறு பாவங்கள்,

பலவீனங்களிலிருந்தும் எல்லா தீமைகளிலிருந்தும் உம்மைக் காப்பாற்றுவான். நன்மை செய்யும் வாய்ப்பையும் பெறுவீர்கள். நிபந்தனை என்னவென்றால், நீங்கள் நோன்புடன் சம்பந்தப்பட்ட எல்லா நிபந்தனைகளையும் பேண வேண்டும்.''

நீங்கள் நோன்பு வைத்தால் உங்கள் கண், காது, நாக்கு, ஒவ்வொரு உறுப்புக்கும் அது பொருந்தும் (பயனளிக்கும்). ஏனெனில், கேடயம் பயனளிப்பதற்கு இவை அனைத்தையும் பாதுகாக்க வேண்டும். அதுவன்றி வெறுமனே நோன்பு வைப்பதால், நீங்கள் தக்வாவை பெற்றுவிட மாட்டீர்கள். உங்களை நீங்கள் பயிற்சி பெற வேண்டும்; பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதே வேளையில் நோயாளியாகவோ, பயணியாகவோ இருக்கும் நிலையில் நோன்பு வைக்க அனுமதியில்லை. ஏனெனில், அந்நாட்களில் நோன்பு வைக்காமல் மற்ற நாட்களில் வைக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது.

ஏனெனில் தக்வா என்பது அல்லாஹ்வுடைய கட்டளைக்குக் கட்டுப்படுதலில் இருக்கிறது; பட்டினி கிடப்பதில் அல்ல. மேலும் திருக்குர்ஆன் ஓதுவது, அதனுடைய கட்டளைகளின்படி அமல் (நற்செயல்) செய்வது அவசியமாகும்.

எண்ணற்ற கட்டளைகள் திருக்குர்ஆனில் உள்ளன. அதன் எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் உள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

"திருக்குர்ஆனின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை ஏவல், விலக்கல்கள் (செய்ய வேண்டியவை, செய்யக்கூடாதவை), இறை கட்டளைகளிள் விளக்கங்கள் உள்ளன. அவற்றின் பல நூறு கிளைகளும் கூட விளக்கப்பட்டுள்ளன. தக்வாவைப் பெறுவதற்கு இந்த கேடயத்திற்குப் பின்னால் வர வேண்டும். அது உண்மையில் அல்லாஹ்வின் கேடயமாகும். இறைவன் கூறுகின்றான். நோன்பாளிக்கு நானே கூலி. இது ஹதீஸே குத்ஸியில் வருகிறது. அதாவது, எந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு செய்தியை அல்லாஹ் கூறுவதாக கூறுகின்றார்களோ அது ஹதீஸே குத்ஸியாகும்.''

ஆகவே, நோன்பில் நஃப்ஸை முற்றிலும் கணக்கிட்டவாறு, காதுகளைக்கூட வீணாக, தீய காரியங்களை கேட்பதிலிருந்து பாதுகாத்து, மார்க்கத்தை எள்ளி நகையாடுகிற சபைகளை விட்டும் விலகி, தமது சகோதரரைப் பற்றி புறம் பேசுகிற சபைகளை விட்டும் விலகி, இறைவன் தடுத்தவற்றை பார்ப்பதை விட்டும் தன்னை பாதுகாத்துக் கொள்ளும்போதுதான் நோன்பு பயனளிக்கும்.

உதாரணமாக, பெண்களுக்கு தம்மைத் திரையிடுமாறு கட்டளை உள்ளது. ஆண்களுக்கு, பெண்களைப் பார்க்கக் கூடாது என்ற கட்டளை உள்ளது. பெண்களுக்கு, ஆண்களைப் பார்க்கக் கூடாது என்ற கட்டளை உள்ளது. வீணான சினிமாக்கள் இன்று பொழுதுபோக்கிற்காக பார்க்கப்படுகிறது. அதிலிருந்து விலக வேண்டும் என்ற கட்டளை உள்ளது. இந்த ரமலானுடைய காலத்தில், நோன்பின் காலத்தில் இந்த பழக்கத்தை விட்டு விட்டால், வருங்காலத்திலும் இந்த நோன்பின் விளைவால் இந்த தீமைகளிலிருந்து தப்பி விடுவோம்.

மேலும் நாவின் நோன்பு என்பது எவரையும் தீய வார்த்தை பேசாமல் இருத்தல், துக்கம் கொடுக்காமல் இருத்தல் ஆகும்.

இது குறித்து ஒரு நபிமொழியில் வருகிறது. நோன்பின் நிலையில் ஒருவர் கடுமையான வார்த்தையை உங்களைப் பார்த்துக் கூறினால், சண்டைக்கு வந்தால் நீங்கள், **இன்னி சாயிமுன் - நான் நோன்பாளி** என்று கூறி அமைதியாகி விட வேண்டும். வேறு பதில் ஒன்றும் கூறாதீர்கள். அதாவது நான் நோன்பாளி. நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். நான் பதில் தரப்போவதில்லை. ஏனெனில், நான் ஒரு

தர்பிய்யத் Course –ல் இருக்கிறேன். அதில் எனது எல்லா உறுப்புகளுக்கும் நோன்பு இருக்கிறது. நான் எனது நோன்பை உமக்கு பதில் தந்து களங்கப்படுத்த விரும்பவில்லை.

இவ்வாறு கைக்கும் நோன்பு உண்டு. எந்தவொரு தவறான வேலையும் கையால் செய்யாதீர்கள். இறைவன் தடுத்த எந்த வேலையையும், அல்லாஹ்வின் ரஸூல் தவறு என்று கூறிய எந்த வேலையையும் மற்றவர்களுக்காகவும்கூட செய்யக் கூடாது. ஒருவர் தான் பன்றி மாமிசம் உண்பதில்லை. ஆனால் மற்றவரை உண்ண வைக்கின்றார் எனில் அது தவறான வேலை. ஒருவர் தாம் மது அருந்துவதில்லை. ஆனால் பிறரை மது குடிக்க வைக்கிறார் எனில் அது பாவமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறரை மது குடிக்க வைப்பவரின் மீதும் சாபமிட்டுள்ளார்கள். எனவே, நோன்பு கடமையாவதற்கு, அல்லாஹ்வின் தக்வாவை கைக்கொள்பவராவதற்கு இந்த நிபந்தனைகளையும் ஒருவர் நிறைவேற்ற வேண்டும். இறைவன் நோன்பின் காலத்தில் மூஃமின் மீது இட்டுள்ள நிபந்தனைகளைப் பேண வேண்டும். ஒரு பயிற்சியை அவர் பெறும்போது கேடயத்தை சரியாக பயன்படுத்தப் பழகி விடுவார். அதுவன்றி வெறுமனே நோன்பு வைப்பது எந்த பயனும் தராது. அது தன்னையும், இறைவனையும் ஏமாற்றும் வேலையாகும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“எல்லா நிபந்தனைகளோடும் ஒருவர் நோன்பு வைக்கவில்லை எனில், அல்லாஹ் நோன்போடு கூறியுள்ள நிபந்தனைகளை ஒருவர் பேணவில்லை எனில், இறைவன் கூறிய எல்லா காரியங்களையும் அவர் செய்யவில்லை எனில் உங்கள் பட்டினியால் இறைவனுக்கு ஒன்றும் ஆகப்போவதில்லை.”

எனவே, நாம் இந்த காலத்தில் இந்த பயிற்சியை எடுக்க வேண்டும். நம்மை நாம் இந்த கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும். காரணம், அப்போதுதான் இறைவன் நம்மை எல்லா ஏவல், விலக்கல் (செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை) களையும் கவனத்தில் கொண்டு வாழ்வை கழிப்பவராக்கும் தவ்ஃபீக்கைத் தருவான். அதன் மூலம் இறைவன் கட்டளையிட்ட செயல்களை நாம் செய்துள்ளோம். அதில் அவன் திருப்தி அடைய வேண்டும். நிரந்தரமாக அவன் நமக்கு கேடயம் ஆக வேண்டும். இவ்வாறு எதிரிகளின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் தனது சிறப்பான அடியார்களை பாதுகாக்கின்றான். அவ்வாறே நம்மையும் செய்வானாக!

நோன்பின் நாட்களில், ரமலான் மாதத்தில் அல்லாஹ் நம்மை இதன் பக்கம் கவனமூட்டியுள்ளான். இந்நாட்களில் எனக்காக, எனது திருப்தியைப் பெறுவதற்காக விலக்கப்பட்டவற்றிலிருந்து விலகியிருப்பது மட்டுமின்றி, காது, கண், நாவு ஆகியவற்றை சிறப்பான முயற்சியில் அற்பமான விலக்கல்களை விட்டும்கூட விலகி, பாதுகாத்து வைக்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளான். அதனை பாதுகாக்க முயற்சி செய்தே ஆக வேண்டும். ஆனால் அனுமதிக்கப்பட்டவற்றிடமிருந்து கூட விலகி இருக்க வேண்டியுள்ளது. இது எத்தகைய ஒரு ஜிஹாது எனில் அதனால் உங்களிடம் பொறுமையும் சகிப்புத் தன்மையும் உருவாகிறது. ஒழுக்கம் உருவாகிறது. இந்த முயற்சி பிறகு உங்கள் ஆன்மீக நிலையை சிறந்ததாக்க காரணமாக அமையும். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத்தர காரணமாக அமையும். துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் காரணமாக அமையும்.

நான் ஓதிய கடைசி வசனத்தில், இதே கருத்தைக் கூறியுள்ளான். நோன்பைப் பற்றி கட்டளையை யொட்டியே அல்லாஹ் கூறுகின்றான். இந்த வசனத்திற்கு பிறகு நோன்பு பற்றிய கட்டளையே உள்ளது.

அல்லாஹ் நோன்பின் கட்டளைகள், விபரங்களுடன் நான் ஓதிய கடைசி வசனத்தில் **இன்னி கரீப் – நான் அருகில் இருக்கிறேன்** என்று கூறியுள்ளான். இந்த பிரகடனம் ஒரு தெளிவான சுட்டிக்காட்டுதலாகும். என்னை நோக்கி வருவதற்கு, ரமலான் மாதத்தின் பயனைப் பெறுவதற்கு முயற்சி செய்வீர்கள் எனில், கேளுங்கள்! இந்த இபாதத் எத்தகையது எனில், அதற்குரிய கூலி நானேயாவேன். கூலி தருவதற்காக நான் முற்றிலும் உங்கள் அருகில் வந்து விடுகிறேன்.

எனவே, எனது அடியார் எனது இந்த வார்த்தைகளின்படி அமல் செய்து, **வல்லதீன ஜாஹதூ ஃபீனா லனஹ்தியன்னஹூம் சுபுலனா** – எவர் நம்முடைய வழியில் முயற்சிப்பாரோ அவருக்கு நாம் நம்மை அணுகும் வழியைக் காட்டுகிறோம்.

அல்லாஹ் தன் பக்கம் வருவதற்கு வழிகாட்டுவது மட்டுமின்றி அவ்வாறு வருபவருக்கு வழிகாட்டுதவற்காக தானும் அருகில் வருகின்றான். இந்த வழியாக என்னிடம் வா என்கின்றான்.

நோன்புக்கு இறைவனே கூலியாவான். அதற்காக முயற்சி செய்பவரிடம் நான் அருகில் இருக்கிறேன் என்று கூறி தானே அருகில் வந்து விட்டதை அறிவிக்கின்றான். ஒருமுறை ஒரு பெண் போர்க்களத்தில் ஆபத்தான சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் தனது குழந்தையைத் தேடிக் கொண்டிருப்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்டார்கள். ஒவ்வொரு குழந்தையைக் கண்டதும் அதனை வாரி எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். அன்பைப் பொழிந்து விட்டு குழந்தையை கீழே விட்டாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அவர்களது சஹாபாக்களும் இப்பெண்ணின் செயலைப் பார்த்தனர். தனது காணாமற் போன குழந்தையைத் தேடிய அந்தப் பெண்ணுக்கு தன்னுடைய குழந்தை கிடைத்ததும், குழந்தையை மார்போடு அணைத்தவாறு அங்கேயே உட்கார்ந்து குழந்தையைக் கொஞ்ச ஆரம்பித்து விட்டாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனைப் பார்த்து தமது சஹாபாக்களிடம் கூறினார்கள். இப்பெண் எவ்வாறு நிம்மதியிழந்து தன் குழந்தையைத் தேடினாளோ, எல்லா ஆபத்துகளையும் பொருட்படுத்தாமல் தேடினாளோ, அந்த இடம் யுத்தக்களமாக இருந்தபோதிலும், குழந்தை கிடைத்ததும் அப்பெண் நிம்மதியடைந்து அதனைக் கொஞ்சத் தொடங்கினாள். அதுவும் அங்கேயே உட்கார்ந்து சூழ்நிலையை மறந்து மகிழ்ச்சியடையத் தொடங்கினாள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

தனது அடியான் தன்னை நோக்கி வருவது, நன்மையின் வழியில் நடப்பது கண்டு, இக்குழந்தையிடம் தாய் மகிழ்ச்சியடைந்தது போன்று அல்லாஹ் மகிழ்ச்சி அடைகின்றான்.

ஆகவே, அந்த அளவு அன்பு செலுத்தக்கூடியவன் நமது இறைவன். அவன் நம் பக்கம் வருவதற்காக நாம் ஏன் அமல் செய்யக்கூடாது? ஒரு தாய் தனது குழந்தையின் சில தற்காலிக தேவையை மட்டுமே நிறைவேற்றக்கூடியவள். அதுவும் அவளால் முடிந்த அளவுதான்.

ஆனால், நம் இறைவனோ ரப்புல் ஆலமீன் – வானங்கள், பூமியின் எஜமானன். முழு பிரபஞ்சத்தின் உரிமையுள்ளவன். அளவற்ற ஆற்றல்கள், கருவூலங்களின் இறைவன். அவன் தனது அடியானிடம் மகிழ்ச்சி அடைந்து அவனை நெருங்கி வருகின்றான் என்றால், அதற்காக நம்மால் எதுவும் செய்ய முடியாதா? அல்லது செய்யமாட்டோமா? நோன்பு அவனது நெருக்கத்தைப் பெறும் வழியாகும். துஆ ஏற்றுக் கொள்ளப்படும் வழியாகும். ஆக, இந்த நாட்களில் நமது வேலை முன்பை விட அதிகமாக அஞ்சி நடுநடுங்கி தனது இறைவனை அழைக்க வேண்டும். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். வெறும் தனது சொந்த நோக்கங்களுக்காக மட்டும் தனது தற்காலிக தேவையை நிறைவேற்றுமாறு வேண்டி மட்டும் அழைக்கக்கூடாது. மாறாக, தமது அழைப்பில் அவனது திருப்தியையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவனது விருப்பம் என்ன? அவன் கூறுகின்றான். **ஃபல் யஸ்தஜீபூலி வல்யுஃமினூபி** – நீங்கள் எனது அழைப்புக்கு பதில் தர வேண்டும்; என் மீது ஈமான் கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் குரலுக்கு செவிசாய்ப்பது என்பது அவனது கட்டளையின்படி அமல் செய்வதாகும். அது குறித்து முதலிலேயே விளக்கப்பட்டது. ஈமான் கொள்வது என்றால், ஈமானில் முன்னேறுவது என்று பொருள். மூஃமினின் ஒவ்வொரு அடியும் முன்னேற்றத்தின் பக்கம் எடுத்து வைக்கப்பட வேண்டும்.

**திருக்குர்ஆனில் ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

**யா அய்யுஹல்லதீன ஆமனூ ஆமினூ பில்லாஹி வ ரஸூலிஹி** – நம்பிக்கைக் கொண்டவர்களே! அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் மீது ஈமான் கொள்ளுங்கள். வெறும் வாயளவில் ஈமான் கொள்வது போதுமானதன்று. நாம் ஈமான் கொண்டோம் என்று சொன்னால் போதாது. மாறாக, அல்லாஹ்வின் ரஸூலின் மீதுள்ள உங்கள் ஈமான் அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகிறான். ஒவ்வொரு நாளும் முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைத்துக் கொண்டு செல்ல வேண்டும். இந்நிலை ஏற்படும் போதுதான் நீங்கள் முழுமையான ஈமானின் பக்கம் சென்றவர்கள் என்று கூற முடியும். அதற்காக தொடர்ச்சியான முயற்சி தேவை. எனவேதான், முயற்சி தொடர்ந்து கொண்டிருப்பதற்காகவும், தக்வாவில் முன்னேற்றம் ஏற்படுவதற்காகவும் இறைவன் இபாதத் செய்வதற்கு கட்டளையிட்டுள்ளான்.

ஒவ்வொரு வருடமும் நோன்பாகிய இந்த முயற்சியும் ஈமானின் வளர்ச்சிக்கு ஒரு படிக்கட்டு ஆகும். எனவே இந்த நாட்களில் ஒவ்வொரு மூஃமினும் இதிலிருந்து முழுமையான பயனடைய முயற்சி செய்ய வேண்டும். ஈமானில் முன்னேற்றம் எந்த அளவு இருக்கிறது என்று பார்ப்பதற்காக ஒரு அடையாளத்தையும் அல்லாஹ் கூறியுள்ளான். நீங்கள் களங்கமற்ற முறையில் என் பக்கம் வருவீர்கள் எனில், நோன்பும் எனக்காக இருக்கும். எந்த உலகக் கலப்பும் வணக்கங்களில் இருக்காது. எனது விருப்பத்திற்காகவே இவையெல்லாம் இருக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான்: **உஜீபுத் தஅவத்த தாயி இஸா தஆன்** – துஆ செய்பவரின் துஆவுக்கு அவர் என்னை அழைக்கும் போது பதில் அளிக்கிறேன். இந்த அழைப்பு நீங்கள் முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைக்கும்போதுதான் கேட்கப்படும். துஆ ஏற்றுக் கொள்ளப்படுவது ஈமானில் வளர்ச்சி ஏற்படும்போதுதான் ஏற்படுகிறது. அல்லாஹ்வுடைய கட்டளைக்கு தூய்மையான முறையில் பேணுதல் செய்யப்படும்போது அந்நிலையில் இபாதத் செய்ய முயற்சி செய்யப்படும்போது ஈமானில் வளர்ச்சி ஏற்படுகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனது அடியான் என்னைப் பற்றி கேட்டால், நான் மிகவும் அருகில் இருக்கிறேன். துஆ செய்பவரது துஆவுக்கு நான் பதில் அளிக்கிறேன். சிலர் எனது இருப்பின் மீது சந்தேகம் கொள்கின்றனர். எனது இருப்பிற்கான அடையாளம் நீங்கள் என்னை அழையுங்கள். என்னிடமே கேளுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யும்போது நான் அதற்கு பதில் அளிப்பேன். உங்களை நினைவு கூர்வேன்.

நாங்கள் அழைக்கத்தான் செய்கிறோம். அவன்தான் எங்களுக்கு பதில் தரவில்லை என்று நீங்கள் கூறுவீர்கள் என்றால் அதற்குப் பொருள் நீங்கள் தூரமான இடத்தில் இருக்கிற ஒருவனை அழைக்கிறீர்கள். உங்கள் காதுகளிலோ சற்று செவிடும் இருக்கிறது. அந்நிலையில் தூரத்திலிருந்து வரும் சப்தத்தை உங்கள் காதுகளின் செவிட்டின் காரணத்தால் கேட்க முடியாது. எனவே, உங்களுக்கும் அவனுக்கும் இடையில் உள்ள திரையெல்லாம் விலகும்போது நீங்கள் நிச்சயம் அவனது குரலைக் கேட்பீர்கள். உலகம் தோன்றியதிலிருந்து இதற்கு ஆதாரம் கிடைத்து வருகிறது. அவன் தனது சிறப்பான அடியார்களோடு உரையாடவே செய்கின்றான். அவ்வாறு இல்லையெனில், அவனது இருப்பு பற்றிய நம்பிக்கையே சிறிது சிறிதாக அழிந்து விடும். எனவே, அவன் இருக்கின்றான் என்பதற்கு ஒரு வலுவான ஆதாரமே நாம் அவனது குரலைக் கேட்பது தான்.

இறைவனுக்கும் கேட்பவருக்கும் இடையில் ஒரு திரை இருக்கும் வரை நாம் கேட்க முடியாது. இடையிலுள்ள திரை அகலும்போது அவனது குரல் கேட்கக் கிடைக்கும். ஆகவே, அல்லாஹ் நமக்கு வாய்ப்பு தந்துள்ளான். நாம் இந்த இடையில் உள்ள திரையை அகற்றவும், அவனது அருகில் செல்லவும் முயற்சி செய்ய வேண்டும். ரமலானில் மட்டும் அருகில் வர முயற்சி செய்து விட்டு பிறகு எவ்வளவு முடியுமோ அவ்வளவு

திரைகளைப் போட்டு விட்டு தூர விலகிப் போய் விடக்கூடாது. பிறகு அடுத்த வருடம் ஆரம்பத்திலிருந்து முயற்சியைத் தொடங்கக் கூடாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த திரையை அகற்ற நாம் முயற்சி செய்ய வேண்டும். அப்போது துஆ ஒப்புக் கொள்ளப்படும் காட்சியை எப்போதும் பார்ப்போம். அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுவதற்காக துஆ செய்வது எல்லாவற்றிலும் முதன்மையானது. நமது முதல் துஆ மார்க்கத்தின் வெற்றிக்காக செய்யப்பட வேண்டும். மனித குலத்தை இறைவன் முன் குனிய வைப்பதற்காக துஆ செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் மனித குலத்தைக் கொண்டு வருவதற்காக துஆ செய்ய வேண்டும்.

இந்த துஆக்களே இறைவனுடைய அருளை ஈர்க்கக்கூடிய துஆக்கள் ஆகும். ஒரு மூஃமின் மார்க்கத்தின் மீது அக்கறை கொண்டவாறு, அதற்காக துஆ செய்வார் எனில், அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப தனது அடியானின் சொந்தத் தேவைகளையும் நிறைவேற்றுவான். இன்று இந்த துஆக்களை ஒவ்வொரு அஹ்மதியும் செய்ய வேண்டும். அவனது மார்க்கத்தின் வெற்றிக்கான துஆக்களை செய்ய வேண்டும். ஜமாஅத்தின் ஒவ்வொரு தனி நபரும் ஈமானில் நிலைநிற்பதற்கும் துஆ செய்ய வேண்டும். இன்று ரமலானில் முதல் ஜுமுஆவாகும். இந்த நாளும் அருளுக்குரியதாகும். இம்மாதமும் அருளுக்குரியதாகும். துஆ ஒப்புக் கொள்ளப்படும் இரு வாய்ப்புகள் இங்கு இணைகின்றன. இறைவனை அழைப்பதற்கு இரு அரிய சந்தர்ப்பங்கள் கைகூடியுள்ளன.

நபிமொழியில் வருகிறது. ஜுமுஆவுடைய நாளில் ஒரு நேரம் வருகிறது. அந்நேரத்தில் துஆ ஒப்புக் கொள்ளப்படுகிறது. இன்னும் ஒரு நேரம் வருகிறது. அது அஸரிலிருந்து மக்ரிப் வரையுள்ள நேரத்தில் ஒரு குறிப்பிட்ட வேளை வருகிறது. அதில் துஆ ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆகவே, இன்றைய நாளில் இந்த பரக்கத்திலிருந்து பயனடைய முயற்சி செய்ய வேண்டும். அஸரிலிருந்து மக்ரிப் வரை நஃபில்கள் தொழக் கூடாது. ஆனால், திக்ரே இலாஹி மற்றும் மஸ்னூன் (திருக்குர்ஆன், நபிமொழிகளிலுள்ள) துஆக்களை அல்லது தனது சொந்த துஆக்களை மனிதன் செய்ய இயலும். அதன் மூலம் இறைவனது நெருக்கம் கிடைக்கும். துஆ ஒப்புக் கொள்ளப்படும் காட்சியை நாம் காண இயலும்.

இன்று பல்வேறு இடங்களில் ஜமாஅத்திற்கும் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அந்த அடிப்படையிலும் துஆ செய்ய வேண்டும். ஏனெனில், அல்லாஹ்வுடைய அருளினாலேயே நாம் எல்லா விதமான பிரச்சனைகளிலிருந்தும் வெளியேற முடியும். இறைவன் தனது நெருக்கத்தை வழங்குவான். துஆ ஒப்புக் கொள்ளப்படும் காட்சியை நாம் பார்ப்போம் இன்-ா அல்லாஹ். எனவே, அல்லாஹ்விடம் உருகி துஆ செய்யுங்கள். அல்லாஹ், இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் வெற்றிக்கான வழி வகைகளை நமது வாழ்விலேயே ஏற்படுத்தட்டும். நாம் மிகவும் பலவீனமானவர்கள். நமது பலவீனத்தை அவன் அகற்றுவானாக. நமக்கு நெருக்கத்தின் வழியைக் காட்டுவானாக! அவனது திருப்தியைப் பெறுவது நமது இலக்காக ஆகட்டுமாக. நாம் மிகவும் பலவீனமானவர்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கொடுக்கப்பட்ட வாக்குறுதியாகிய திகிலைக் கொண்டு உனக்கு உதவி செய்யப்படும் என்பதில் நமக்கும் பங்கு தருவானாக! ஏனெனில் எதிரிகளுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதுள்ள பயத்தை நாம் பார்த்து வருவோமாக! அல்லாஹ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வாக்களிக்கிறான். உன்னைப் பற்றி எள்ளிநகையாடுபவர்கள் இறைவனுடைய பிடியில் வந்து விடுவர்.

இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறுகின்றான். எவர்கள் உன்னை எள்ளி நகையாடுகின்றார்களோ அவர்களைப் பிடிக்க நாம் போதுமானவன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீது எள்ளி நகையாடியவர்கள் அடைந்த தீய முடிவை நாம் பார்க்கவும் செய்தோம்; கேட்கவும் செய்தோம். ஆனால் நாம் ஒரு கவலை கொள்ள வேண்டும். நமது

பலவீனம், தவறு காரணமாக இறைவனது வாக்குறுதி நிறைவேறும் நாள் இன்னும் தள்ளிப்போய்விடக் கூடாது. நமது பலவீனம், எதிரிகளின் எள்ளி நகையாடலுக்கு காரணமாகிவிடக் கூடாது. அல்லாஹ் நமது குறைகளை திரையிடுவானாக! மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்காக தனது கம்பீரத்தின் மகத்துவத்தின் ஒளியைக் காட்டுவானாக!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவம், கண்ணியத்தை மஸீஹே முஹம்மதின் அடியார்களாகிய நாம் – நமது உண்மையான அடியாராக மாறியவாறு நமது வாழ்வில், உலகின் ஒவ்வொரு நகரிலும், வீதியிலும் நிலைநாட்டிக் காட்ட வேண்டும். நமது பலவீனங்கள், குற்றம் குறைகள், சோம்பல்கள் இறைவனுடைய அருளில் இருந்து ஒருபோதும் நம்மை விலக்கி விட வேண்டாம். அல்லாஹ் தனது அருளினால் மட்டுமே நமது பலவீனமான உடலில் ஆற்றலை வழங்குவானாக! அவனது மார்க்கத்திற்காக எல்லா வகையான தியாகமும் செய்யத் தயாராக ஆக்குவானாக! அல்லாஹ் தனது அன்பை நமது உள்ளத்தில் அல்லாஹ், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் விரும்பிய அளவு நிறைப்பானாக! அதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு ஒரு துஆவை கற்றுத் தந்துள்ளார்கள்.

**அல்லாஹும்ம இன்னி அஸ்அலுக ஹுப்பக வஹுப்ப மன் யுஹிப்புக வல் அமலுல்லதி யுபல்லிகுனி ஹுப்பக. அல்லாஹும்மஜ்அல் ஹுப்பக வஹுப்ப இலைய்ய நஃப்ஸி, வமாலி, வஅஹ்லி வமினல் மாஇல் பாரித்** – அல்லாஹ்வே! உன்னிடம் உனது அன்பை கேட்கிறேன். உன்னிடம் அன்பு செலுத்துபவர்களின் அன்பையும், உனது அன்பை பெற்றுத் தருகிற அமலையும் கேட்கிறேன். அல்லாஹ்வே! உனது அன்பை என் உள்ளத்தில் உருவாக்குவாயாக! அந்த அன்பு என் நஃப்ஸை விடவும், எனது பொருளை விடவும், எனது குடும்பத்தை விடவும், குளிர்ந்த நீரை விடவும் அதிக அன்புக்குரியதாக இருக்கட்டுமாக!

இந்த அன்பு மூலம் நமது ஒவ்வொரு அமலையும் அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெற காரணமாக ஆக்குவானாக! அல்லாஹ்வின் எல்லா கட்டளைகளையும் அவனது அன்பிற்காக செய்ய வேண்டும். நமது நஃப்ஸின் விருப்பத்தை இறைவனின் அன்பின் காரணத்தால் அடக்கி வைப்பவர்களாக ஆக்குவானாக! பொருளின் மீதுள்ள அன்பு அல்லாஹ்வின் மீதுள்ள அன்பிலிருந்து கவனமற்றதாக நம்மை ஆக்கி விடாதிருப்பானாக! மனைவி மக்களின் மீதுள்ள அன்பு அல்லாஹ்வின் மீதுள்ள அன்பை விட்டு கவனமற்றதாக்கி விடாதிருப்பானாக!

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

**லா துல்ஹிகும் அம்வாலுக்கும் வலா அவ்லாதுகும் அஸ்ஸிக்ரில்லாஹ்** – உங்கள் பொருள், குழந்தைகள் அல்லாஹ்வுடைய திக்ரிலிருந்து உங்களை விலக்கி விட வேண்டாம். ஆகரீன்களின் காலத்தில் இது அதிகமாக வேண்டியிருந்தது. உலகின் பேராசை, பொருளின் ஆசையின் புதிய புதிய வழிமுறைகள் கண்டுபிடிக்கப்படவிருந்தன. எனவே, இக்காலத்தில் இவற்றிலிருந்து தப்புவது அல்லாஹ்வுடைய அன்பை எல்லா அன்பையும் விட மேலோங்கச் செய்தல் ஆகியவை இறைவனது சிறப்பான நெருக்கத்தைப் பெற்றுத் தருகிறது. அதற்கு உதாரணமாக குளிர்ந்த நீர் தரப்பட்டுள்ளது. தாகமுள்ள ஒருவர் குளிர்ந்த நீரைத் தேடிக்கொண்டு, தண்ணீர் எங்கும் கிடைக்காதபோது, சிறிது தண்ணீருக்காக அவர் தன்னிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராகி விடுவார். ஆனால், ஒரு உண்மையான மூஃமினுக்கு அல்லாஹ் ஒரு துஆவை கற்றுத் தந்துள்ளான். தாகமுள்ள நிலையில் கிடைக்கும் தண்ணீரை நீங்கள் எத்தகைய பெரும் நிஃமத் ஆக கருதுவீர்களோ அதேபோன்று அல்லாஹ்வுடைய நிஃமத் உங்கள் உள்ளத்தில் நிலைநாட்ட வேண்டும். இந்த துஆவைக் கேட்டவாறு, நம்மையும் கேட்குமாறு கூறி ஓர் முன்மாதிரியை நம்மீது நிலைநாட்டியுள்ளார்கள். வெறுமனே துஆ மட்டும் செய்யவில்லை. அமல் ரீதியாகவும் செய்து காட்டினார்கள்.

இந்த நாட்களில் மார்க்கத்தை உயர்த்துவதற்காக, அஹ்மதிய்யத்தாகிய உண்மை இஸ்லாத்தின் வெற்றிக்காக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் பறக்க விடுவதற்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். அத்துடன் நாம் அல்லாஹ்வுடைய நெருக்கத்தைப் பெறுவதற்காக நாம் துஆ செய்வோம் எனில், நாம் இறைவனது நெருக்கத்தைப் பெறுபவர்கள் ஆவோம். நாம் தக்வாவில் முன்னேறியவர்களாக மாறுவோம்.

இந்த ரமலானில் நாம் இந்த நோக்கத்தைப் பெற்று விட்டோம் எனில், அல்லாஹ்வுடைய நெருக்கத்தையும் திருப்தியையும் பெறுவோம். தக்வாவில் முன்னேறுபவர்களாவோம். அந்நிலையில் **இன்னீ கரீப்** – நான் அருகில் இருக்கிறேன் என்ற குரலைக் கேட்பவர்கள் ஆவோம். **உஜீபு தஃவத்த தாயி இஸா தஆனி** – நீங்கள் துஆ செய்தால் நான் அதற்கு பதில் அளிப்பேன் என்ற காட்சியையும் காண்போம். ஏனெனில் இந்த வசனத்தின் இறுதியில் **லஅல்லஹும் யர்ஸிதூன்** – அதன் மூலம் அவர்கள் நேர்வழியைப் பெறுவதற்காக என்று கூறி இறைவன் ஓர் அறிவிப்பு செய்துள்ளான். எவர்களிடம் நற்செயல் இருக்குமோ, ஈமானில் வளர்ச்சி இருக்குமோ என் பக்கம் கவனம் இருக்குமோ அந்த மூஃமினே நேர்வழி பெற்றவர் ஆவார்.

நேர்வழி பெற்றவருக்காக இறைவன் அறிவிப்பு செய்துள்ளது என்னவென்றால் அத்தகைய தூய்மையாளரின் அழைப்பிற்கு இறைவன் பதில் அளிக்கின்றான். ஆகவே, மஸீஹே முஹம்மதின் அடிமைகளே! அவரது இருப்பின் மரத்தின் பசுங்கிளைகளே! அல்லாஹ்வின் நேரான வழியினைப் பெற்றவர்களே! இக்காலத்தில் உலகியல் சமுதாயத்தில் அநீதிகளுக்கு உள்ளாகி நாள்களை கழித்துக் கொண்டிருப்பவர்களே! அநீதியிழைக்கப்பட்டவரின் துஆவை அல்லாஹ் மிகவும் கேட்கிறான். உங்களுக்கு அல்லாஹ் வாய்ப்பு தந்துள்ளான். இந்த ரமலானை அல்லாஹ்வுக்காக தூய்மைப்படுத்தி அல்லாஹ்விடம் துஆவில் இந்நாட்களை கழியுங்கள். இந்த ரமலான் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் இரண்டாவது நூற்றாண்டின் முதல் ரமலான் ஆகும். இறைவன் முன் ஸஜ்தாவிலும் துஆவிலும் ஒரு புத்துயிரை உருவாக்குபவர்களாக மாறுங்கள். தமது வாழ்நாளில் தூய மாற்றத்தை ஏற்படுத்தும் ரமலானாக மாற்றுங்கள். உமது கண்ணீரால் ஒரு புரட்சியை உருவாக்குங்கள். அதனால் எதிரிகள் தமது எல்லா திட்டங்களை விட்டு சின்னாபின்னமாகி ஓடி விடட்டும். துஆவில் ஒரு உருக்கத்தை உருவாக்குங்கள். அது இறைவனுடைய பிரியத்தை உங்களிடம் ஈர்த்துக் கொண்டு வரட்டும். ஏனெனில் மஸீஹே முஹம்மதின் வெற்றியின் இரகசியம் முழுக்க முழுக்க துஆதான். இறைவன் இந்நாட்களில் நம்மில் ஒவ்வொருவரையும் தனது அரவணைப்பில் ஈர்த்துக் கொள்வதற்காக ஏழாம் வானத்திலிருந்து கீழே இறங்கி வருகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் தந்த வாக்குறுதியை நமது வாழ்வில் நிறைவேறக் காண்போம். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 05.09.2008**

Translated by : **Muallim M. Nisamudeen Sb.**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**